1972 மார்ச் 1]

(இ) முத்துக் குளிப்பவர்கள், அவர்கள் எடுத்த முத்துச் சிப்பிகள் மூன்றில் ஒரு பங்கினை தங்களது பங்காக எடுத்துக் கொள்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் முத்து கிடைக்கிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கிறது என்பதைப்பற்றி அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, 1955-லிருந்து 1961-ம் ஆண்டு வரையிலும்தான் முத்து எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே 21 ஆண்டுகளுக்கு முன்பு முத்து எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பு இருக்கிறது. 1955-ம் ஆண்டிலிருந்து 1961-ம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட ரூ. 17,64,013 பெருமான முத்துக்கள் அரசாங்கத்தின் வருவாய்க்கு வந்திருக்கின்றன.

* 268 **வினா—திரு. எம். முத்தையா** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி கடலில் முத்து எடுப்பது எத்தனை ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறுகிறது ?

(இ) அடுத்தப்படியாக முத்து எப்போது எடுக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) முத்துக் குளிப்பதற்கென்று குறிப்பிட்ட கால இடைவெளி எதுவும் கிடையாது. முத்துச் சிப்பிகள் முதிர்ச்சி அடைவதைக் கொண்டே முத்துக்குளிக்கப்படுகிறது. முத்துக்குளிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிவதற்காக ஒவ்வோர் ஆண்டும் முத்துச்சிப்பிபார் ஆய்வு செய்யப்படுகிறது. 26 ஆண்டுகளுக்குப் பின்னர் 1955 முதல் 1961 வரையில் கடைசியாக முத்துக் குளிக்கப்பட்டது.

(இ) 1970-ல் நடத்திய முத்துச்சிப்பிப்பார் ஆய்விலிருந்து, முத்துக்குளிப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்துள்ளது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : சார், அடுத்த ஆண்டு முத்துக் குளிக்கப்படும் என்று 1971-லேயே செய்தி வந்தது அது 1972-ல் செய்யப்படுமா அல்லது 73-ல் செய்யப்படுமா என்பதை திட்ட வட்டமாக அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1973-ல் தான் முத்துக் குளிக்கப்படும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்திருக் கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக 'பாண்டிய நாடு முத்துடைத்து' என்று குறிப்பிட்டாலே தூத்துக்குடியில் தான் என்பது ஞாபகத்திற்கு வரும். 1973-ல் முத்துக் குளிப்பது என்பதில், இப்பொழுது இருக்கும் முறையேப் பின்பற்றுவார்களா அல்லது அதில் ஏதாவது மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1973-ல் முத்துக் குளிக்கப்படும் என்று உறுதியாகக் கூறியிருக்கிறார்கள். சங்கு குளிப்பவர்கள்தான் முத்துக் குளிக்கிறார்கள். அவர்கள் எடுப்பதில் மூன்றில் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு மீதத்தை அரசாங்கத்திற்குக் கொடுக்கிறார்கள். அதுதான் இப்பொழுது இருக்கும் முறை.

சென்னை கலெக்டர் அலுவலகத்திற்குக் கட்டடம்

* 269 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கலெக்டர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது உள்ள சென்னை மாவட்ட கலெக்டர் அலுவலகக் கட்டடம் உபயோகத்திற்கு ஏற்ற வகையில் இல்லை என்று பொறியாளர்கள் அறிவித்திருப் பதாகக் கூறப்படுகிறது. அதோடு அந்த நெரிசலான இடத்தை மாற்றியமைக்க, புதுக் கட்டடம் அமைத்துக் கொடுக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?